வழங்கு. "வழங்கு" என்பது சிறப்பாக கொடைப் பொருளைக் குறிக்கும் சொல்.

A – உதாரணம்: "பாரி" யென்னும் மன்னன் முல்லைக் கொடிக்குத் தன் தேரை வழங்கினான்" (தேர் கொடுத்தான்)

"அரசன் புலவர்களுக்கு பொன்னை வாரி வழங்கினான்."

"திருவள்ளுவர் நாட்டுமக்களுக்குத் திருக்குறளை வழங்கினார்."

"நேற்று என் நண்பனுக்கு ஆண் குழந்தை பிறந்தது அதற்காக அவன் தன்னுடைய நண்பர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கினான்"

"சென்னையிலிருந்து வந்துள்ள இசைக்குழுவினர்கள் இன்று முருகன் ஆலயத்தில் இன்னிசை வழங்க விருக்கிறார்கள்" (நடத்தவிருக்கிறார்கள்)

"கொடையுள்ளம் கொண்ட மன்னன் தன்னுடைய செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்குவான்."

B – "கொங்கு நாட்டு மக்கள், விருந்தினர்களை உறவினர்கள் என்றும், ஒரம்பரை என்றும் வழங்குகின்றனர்" (சொல்கிறார்கள்)

"தமிழக மக்கள் தங்கள் மாநிலத்தை தமிழ்நாடு என்று சிறப்புடன் வழங்குகிறார்கள்" (சொல்கிறார்கள், கூறுகிறார்கள்)

"தமிழகத்தில் கோவை மாவட்டத்தை, கொங்குநாடு என்றும், மதுரை மாவட்டத்தை, பாண்டிய நாடு என்றும், திருச்சி மாவட்டத்தை, சோழநாடு என்றும், சேலம் மாவட்டத்தை, தொண்டை நாடு என்றும் மக்கள் வழங்குகின்றனர்."

கொடு, கூறு, சொல், நடத்து ஆகிய சொற்கள் எல்லாம் வழங்கு எனும் சொல்லுக்குட்பட்ட சொற்களாகும்.

நெறி.

A - அன்புடன் நடத்தல், உண்மை பேசுதல், உதவிசெய்தல் போன்ற ஒழுக்கமுடன் நடப்பதே "நெறி" (நன்னெறி)

"நாட்டில் ஒழுக்கம் கெடாமல் நேர்மையுடன் விதிமுறை தவறாமல் அரசாளும் மன்னனை 'நெறிதவறாத மன்னன்' என்று அண்டை நாடுகள் போற்றும்."

"குடும்ப வாழ்க்கை விதிமுறைகளைப் பின்பற்றி அதன்படி ஒழுக்கமுடன் நடக்கும் பெண் நெறிதவறாதவள்"

"சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் பழிசுமத்தப்பட்ட கோவலனுக்கு அதை ஆராயாமல் கொலைத்தண்டனை கொடுத்த பாண்டிய மன்னன் நெறி தவறியவன்."

"நல்லோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடப்பது நெறி"

B - தீய குணங்களை அகற்றி நல்ல பண்புகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வது நெறி (மதம்)

"தமிழ்நாட்டில் சைவமதம், வைணவமதம் ஆகிய இரண்டு மதங்கள் (சமயங்கள்) உண்டு என்று சொல்லப்படுகிறது.

சைவமதம் சிவபெருமானைப் போற்றும் வழியையும், வைணவ மதம் மகாவிஷ்ணுவைப் போற்றும் வழியையும் மக்களுக்குப் போதித்தனவாம்.

இவ்வாறு சைவநெறியைப் பின்பற்றுவோர் சைவர்கள் எனவும், வைணவ நெறியைப் பின்பற்று வைணவர்கள் எனவும் அழைக்கப்படுகின்றார்களாம்."

விதி, நல்லொழுக்கம், முறை, சமயம், வழி, மதம் ஆகிய சொற்கள் எல்லாம் நெறி எனும் சொல்லுக்கிட்டப்பட்ட வழக்குச் சொற்களாகும்.

நெறிமை.

"அரசன் மக்களைக் காக்கும் நெறிமையுடையவன்."

"ஆசிரியர் மாணவர்களுக்கு நல்லதைக் கற்பித்து அவர்களை நல்வழியில் கொண்டு செல்ல நெறிமையுள்ளவர்."

"பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நற்குணங்களைப் போதிக்க நெறிமையுள்ளவர்கள்."

"ஆட்சியிலுள்ளவர்கள் நாட்டையும், நாட்டுமக்களையும் காப்பாற்ற நெறிமை யுள்ளவர்கள்."

"தாய்மாமன் மகளை மணக்க அத்தைமகன் முறைமையுள்ளவன்."

நெறிமை, முறைமை ஆகிய சொற்கள், ஒருவரின் கடமையைக்-குறிக்கும் சொற்களாகும்.

முறைமை, கடமை ஆகிய சொற்கள் எல்லாம் நெறிமையெனும் சொல்லைத் தழுவிய சொற்களாகும்.

நேர்மை. பெரியோர்கள் கற்பித்த நல்வழியில் தன் மனதுக்கு ஒப்ப நடத்தல் "நேர்மை".

பொய் பேசாமல், அநியாயம் செய்யாமல், பழிசுமத்தாமல் (பழிகூறாமல்) உண்மையுடனும், ஒழுக்கமுடனும் நடப்பதே "நேர்மை."

உதாரணம்:-

"மனிதர்களின் மனதில் நேர்மையில்லாவிட்டால் ஒற்றுமைக்-கிடமில்லை."

"ஆண், பெண் இருவர் மனதிலும் நேர்மை யில்லாவிட்டால் அவர்களின் குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமை யிருக்காது."

"வியாபாரிகள் தாங்கள் விற்கும் பொருளுக்கு ஏற்ற விலையைப்-பெறுதல் நேர்மை."

"மன்னன் மனதில் நேர்மை யில்லாவிட்டால் அந்நாட்டில் வாழும் மக்கள் மன்னனிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது."

"ஒருவன் செய்த குற்றத்தை நன்கு ஆராய்ந்து, பிறகு அதற்குத் தக்கவாறு தண்டனை வழங்குவது நீதி, நேர்மை."

உண்மை, ஒழுக்கம், நீதி, துல்லியம் (சரியாக), ஆகிய சொற்கள் எல்லாம் நேர்மையெனும் சொல்லைத் தொடரும் வழக்குச் சொற்களாகும்.

<u>வழக்கம்</u>: மனிதனுக்கு பல நாள் பழக்கம் நிலையாக மாறி நின்றுவிடும் நீண்ட நாள் பழக்கத்தைக் குறிப்பதே "வழக்கம்."

உதாரணம்:- "ஆங்கில நாட்டின் தொடர்பால், இந்திய மக்களுக்கு ஆங்கிலத்தைப் படிப்பதற்கும், பேசுவதற்கும் பழக்கம் ஏற்பட்டது. இப்பொழுது ஆங்கிலத்தைப் படிப்பதும், பேசுவதும் இந்திய மக்களுக்கு <u>வழக்கமா</u>கிவிட்டது."

"சேகர் தன்னுடைய 15வது வயதில் தன் நண்பர்களுடன் சேர்ந்து ஒரு நாள் சிகரெட் பிடித்துப் பழகினான். அந்தப் பழக்கத்தை அவன் தொடர்ந்து கடைப்பிடித்தான். அதனால், அவனுக்கு சிகரெட் பிடிப்பது <u>வழக்க</u>மாகிவிட்டது. இப்பொழுது சேகர் ஒரு நேர உணவை மறந்தாலும், சிகரெட் பிடிக்கும் வழக்கத்தை மட்டும் மறக்க முடியவில்லை."

"சில மனிதர்கள் காலையில் எழுந்தவுடன் காபி சாப்பிடும் <u>பழக்கம்</u> கொண்டுள்ளார்கள்."

"வழக்கம்" என்ற சொல்லுக்கு "வாடிக்கை" என்ற பொருளும் உண்டு.

நாம் தொடர்ந்து ஒரே கடையில் வழக்கமாக பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்தால், அந்தக் கடைக்காரருக்கு நாம் "வாடிக்கையாளர்.

"ராமசாமிதான் எங்கள் வீட்டுக்கு <u>வாடிக்கை</u>யாகப் பால் கொண்டு வந்து கொடுப்பவர்."

"இப்புகாமி பொய் பேசுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளா

"சில மனிதர்கள் தங்கள் பிழைப்பிற்காக மற்றவர்களை ஏமாற்றுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள்."

<u>பழக்கம், வாடிக்கை</u> ஆகிய சொற்கள் எல்லாம் <u>வழக்கம்</u> எனும் சொல்லுக்

[illegible]

வாலாயம். வழக்கம், வாடிக்கை போன்ற சொற்களின் பொருள் கொண்ட இலக்கியச் சொல் "வாலாயம்" என்பது.

வழக்கம், வாடிக்கை ஆகிய சொற்கள் எல்லாம் வாலாயம் எனும் சொல்லுக்கிட்பட்ட வழக்குச் சொற்களாகும்.

வாடிக்கை. வழக்கம், பழக்கம் ஆகிய சொற்களின் பொருளைக் - கொண்ட சொல்லே "வாடிக்கை" என்பது.

அலவாட்டு. வாடிக்கை, வழக்கம், பழக்கம் ஆகிய சொற்களின் பொருளைக் கொண்ட இலக்கியச் சொல் "அலவாட்டு" என்பது.

வழி. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் பாதை, ஒருவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அவருடைய அறிவுரைகளைப் பற்றி நடப்பது ஆகியவற்றை "வழி" என்று கூறப்படுகிறது.

உதாரணம்:-

(A) "இந்த "வழி" நேராகக் கோவை செல்கிறது ஆகவே, இந்த வழியில் சென்றால் கோவைக்குப் போய்ச் சேரலாம்."

இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குச் செல்வதென்றால் முக்கியமான இரண்டு வழிகள் உண்டு. (i) ஜப்பான் வழியாக அமெரிக்காவிற்குப் போய்ச் சேரலாம். (ii) ஐரோப்பா வழியாக அமெரிக்காவிற்குப் போகலாம். எந்த வழியாக அமெரிக்காவிற்குச் சென்றாலும், விமானத்தில் ஆகாயமார்க்கமாக (வான வழியாக) அல்லது கப்பலில் ஏறி கடல் வழியாக ஆகிய இரண்டு வழிகளில் தான் செல்ல முடியும். அமெரிக்காவிற்குச் செல்லத் தரை வழி கிடையாது.

(B) "நல்லோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அவர்கள் காட்டும் நல்வழியில் செல்வது நல்லது."

"நல்வழியில் சென்றால் வாழ்க்கையில் முன்னேற்றமடைய வாய்ப்புண்டு. தீய வழியில் சென்றால் வாழ்க்கையில் துன்பமடைய நேரும்."

"குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட ஆணும், பெண்ணும் குடும்பவாழ்க்கை நெறியைப் பின்பற்றி நடக்கவேண்டும்."

"சேரமன்னர் மரபில் (பரம்பரையில்) தோன்றியவன் கொடைவள்ளல், பாரி."

"கொங்கு நாட்டில் உள்ள சிவாலயங்கள் சிலவற்றை சோழ மன்னர்கள் மரபில் (வழியில்) தோன்றியவர்களாலும், சிலவற்றை பாண்டிய மன்னர்கள் பரம்பரையில் (வழியில்) தோன்றியவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டவைகள் என்று கூறுகிறார்கள்."

"இந்த ஆண்டு நல்ல மழை பெய்ததால் ஆறுகளிலும், கிணறுகளிலும் நீர் நிறைந்து வழிகிறது (வடிகிறது)"

"அந்தப் பெண்ணின் கண்களில் நீர் நிறைந்து வழிகிறது (வடிகிறது)"

"கொங்கு நாட்டில் தைப் பொங்கலின் போது மக்கள் தங்கள் இல்லங்களை சுண்ணாம்பாலும், மாட்டுச் சாணத்தாலும் பூசி வழிப்பார்கள்."

"அந்தப் பையன் கீழே கொட்டிவிட்ட கடலைகளை வழித்துத் தன்னுடைய பாக்கெட்டில் போடுகிறான்."

பாதை, முறை, தடம், நெறி, மரபு, வடிதல், பூசு, வழி ஆகிய சொற்கள் எல்லாம் வழி எனும் சொல்லுக்கிட்டப்பட்ட வழக்குச் சொற்களாகும்.

<u>நிலை - நில.</u> (நிலை என்பதின் திரிபு நில)

பல்வேறு வகைப்பட்ட சூழ்நிலையில் ஏற்படும் இடம் என்ற பொருள் கொண்டதே "நில"

உதாரணம்:- "நேற்று ஏழையாக இருந்தவன் இன்றைய <u>நிலயில்</u> பெரும்பணக்காரனாக இருக்கிறான்."

"மனிதன் எந்த <u>நிலயிலும்</u> தன் <u>நில</u>யிழக்கக் கூடாது."

"அந்தப் பொருள் நேற்று வைத்த <u>நிலயில்</u> அப்படியே இருக்கிறது."

"அந்த மனிதன் உண்மையைப் பேசும் <u>இயல்பு</u>டையவன்."

"அவன் நேற்றிருந்த <u>நில</u>வேறு இன்றிருக்கும் <u>நில</u>வேறு"

"அரிச்சந்திரன் பொய் பேசக் கூடாது என்ற <u>உறுதி</u>படைத்தவன்."

இயல்பு, தகுதி, உறுதி ஆகிய சொற்கள் எல்லாம் நில என்று சொல்லப்பட்ட வழக்குச் சொற்களாகும்.

<u>களவு.</u> மற்றவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பொருள்களைக் ~~கவ~~ கவர்ந்து வருவதை (எடுத்து வருவதை) "களவு" என்றும் திருட்டு என்றும் சொல்லப்படுகிறது.

உதாரணம்:- "நேற்று எங்கள் வீட்டிலிருந்து பணம் <u>களவு</u> போய்விட்டது."

"நேற்று எங்கள் வீட்டில் பெட்டியிலிருந்த நகைகளை யாரோ களவாடி விட்டார்கள்."

"இன்று பக்கத்து வீட்டிலிருந்து கோழி திருட்டுப் போய்விட்டதாகக் கூறினார்கள்."

"போன வருஷம் திருவிழாவின் போது ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த தங்க நகைகளை யாரோ திருடர்கள் <u>அபகரித்து</u>க் கொண்டார்கள்."

ஆண், பெண் இருவரும் ஒருவரையொருவர் பிறர் அறியாதவாறு நேசித்து, அன்பு கொண்டு நடப்பதையும் இலக்கியத்தில் "களவு" என்று சொல்லப்படுகிறது.

திருட்டு, கவருதல், அபகரித்தல் ஆகிய சொற்கள் எல்லாம் களவு என்ற சொல்லுக்குட் பட்ட வழக்கச் சொற்களாகும்.

<u>நடக்கை</u> = நடத்தை. நடத்தை என்பதின் திரிபு நடக்கை.

ஒருவரின் ஒழுக்கம், செயல் ஆகியவைகளை "நடத்தை" என்று சொல்லப்படுகிறது.

"பொய் பேசாமல், ஒருவர்மேல் பழி சுமத்தாமல் இருத்தல் போன்ற நல்ல நடத்தையுள்ளவர்கள் மக்களால் மதிக்கப்படுவார்கள்."

"குடும்பப் பெண்களுக்கு "<u>நல்ல நடத்தை</u> தேவை."

"தன் கணவனைவிட்டு வேறு ஆடவனுடன் தொடர்புகொண்டிருப்பது, குடும்ப ஒழுக்கத்திலிருந்து மீறி நடக்கும் பெண் <u>கெட்ட நடத்தை</u> உள்ளவள் என்று கூறலாம்."

"கெட்ட நடக்கையுள்ள பெண் குடும்பவாழ்க்கைக்கு ஆகாதவள்."

"நல்ல நடத்தையுள்ளவர்களிடம் நட்புக் கொள்ளவேண்டும்."

<u>ஒழுக்கம், செயல்</u> ஆகிய சொற்களெல்லாம் <u>நடத்தை</u> எனும் சொல்லுக்குட்பட்ட வழக்குச் சொற்களாகும்.

<u>ஊழிமை</u>. பரம்பரை பரம்பரையாக ஒருவருக்கு அடிமைப்பட்டுப் பணிபுரிதல் இலக்கியத்தில் "ஊழிமை" என்று கூறுகிறார்கள்.

"இறைவனுக்கு அவனுடைய அடியார்கள் <u>ஊழிமை</u>ப்பட்டவர்கள்."

"இறைவனுக்கும், அரசனுக்கும் ஊழிமைப்பட்டவர்கள் (ஊழியம் செய்யக் கடமைப்பட்டவர்கள்) உலகில் நிறைய உண்டு."

"ஒருவன் அரசனுக்கு அடிமைப்பட்டுப் பணிபுரிகிறான் என்றால் அது அவனுடைய <u>ஊழிமை</u>."

"அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவனுக்கு அடிமை செய்ய வேண்டுமென்பது அவனுடைய விதி."

<u>விதி</u>, கடமை ஆகிய சொற்கள் எல்லாம் <u>உழிமை</u> என்ற சொல்லுக்-
கிட்டபட்ட வழக்குச் சொற்களாகும்.

<u>முழை</u>. குகை, துளை ஆகியவைகளை இலக்கியத்தில் "முழை" என்று சொல்லப் படுகிறது.

உதாரணம்:-

"அந்த மலையில் உள்ள குகையில் ஒரு முனிவர் இருக்கிறார்."

"கொல்லிநாட்டில் உள்ள சில மலைகளில் குகைகள் இருப்பதாகச்-
சொல்கிறார்கள்."

பக்தி நெறியில் வாழ்ந்து இறப்பவர்களையும், யோகிகளையும் இறுதியில் குகையில் அடக்கம் செய்வார்கள் என்று கூறுகிறார்கள்.

மலையைத் துளைத்துக் குகையுண்டாக்கமுடியும், பூமியைத் துளைத்துக்-
குகையுண்டாக்கமுடியும்.

~~சொ~~ <u>இயல்</u>.

(A) முத்தமிழில் ஒன்று "இயல்." அகத்திணை இயல், பொருளியல் என்று இலக்கியத்தில் கூறப்படுவதாகச் சொல்கிறார்கள்.

(B) இயற்கையாக அமைந்த தன்மையைக் குறிப்பிடுவது "இயல்"

உதாரணம்:-

"வாழ்நாள் முழுவதும் பொய்பேசுவது இவருடைய <u>தன்மை</u>."

"சில மனிதர்கள் பெருந்<u>தன்மை</u> படைத்தவர்களாக இருப்பார்கள்."

"சில மனிதர்கள் தெய்வத்தன்மை படைத்தவர்களாக இருப்பதுண்டு"

<u>தகுதி, தன்மை</u> ஆகிய சொற்கள் எல்லாம் <u>இயல்</u> எனும் சொல்லுக்கிட்டபட்ட வழக்குச் சொற்களாகும்.

இயல்வு = இயல்பு. (இயல்வு என்பதின் திரிபு இயல்பு.)

மனிதர்களுக்கு இயற்கையாக அமைந்த குணம், தன்மை ஆகியவைகளே இயல்பு.

உதாரணம்:-

" உண்மை பேசுவது இவருக்கேற்பட்ட தன்மைக் குணம்."

" ஒரு மனிதனுக்கு எதற்கெடுத்தாலும் முன் கோபம் வருகிறது என்றால் அது அவனுடைய இயல்பு."

" பொறுமையாக இருப்பது சில மனிதர்களுக்கேற்பட்ட சுபாவம்."

" சில மனிதர்கள் ஏதாவது ஒன்றைப்பற்றி பேசிக் கொண்டே இருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய இயல்பு."

" ஒருவன் எப்பொழுதும் முறையோடு நடப்பது அவனுடைய தன்மை."

" நல்ல நடத்தையில் செல்வது இவருக்கேற்பட்ட தன்மை."

" கெட்ட நடத்தையில் சிலர் இருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய இயல்பு."

தன்மை, நடத்தை, முறை, சுபாவம் ஆகிய சொற்கள் எல்லாம் இயல்பு எனும் சொல்லுக்குட்பட்ட வழக்குச் சொற்களாகும்.

இயைவு = இயைபு (இயைவு என்பதின் திரிபுதான் இயைபு.)

ஒன்றுடன் ஒன்று சரியாக இணைந்து நிற்பதே "இயைபு".

குடும்பவாழ்க்கை மேற்கொள்ளும் ஆண், பெண் இருவருக்கும் பொருத்தம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும். ஆதலால், ஒரு ஆணையும், பெண்ணையும் திருமணம் என்ற பெயரில் அவர்களை இணைப்பதற்கு முன் இலக்கண முறைப்படி பொருத்தம் பார்த்து அதன்பிறகு திருமணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

ஆண், பெண் இருவர்களுக்குள் இசைவு ஏற்படாவிட்டால் வாழ்க்கையில் ஒற்றுமையிராது.

ஆணுக்குப் பெண் இசைந்து, பெண்ணுக்கு ஆண் இசைந்து நடக்க வேண்டும்.

"பாடலுக்கும், பக்கவாத்தியத்திற்கும் இசைவு இருந்தால்தான் அதை ரசிக்கமுடியும்."

"கலைகளுக்கும், கலைகளை ரசிப்போருக்கும் இயைபுண்டு."

இசைவு, பொருத்தம், சேர்க்கை ஆகிய சொற்கள் எல்லாம் இயைபு எனும் சொல்லுக்கிட்டப்பட்ட வழக்கச் சொற்களாகும்.

இயற்று.

"கம்பர் இராமாயணத்தை இயற்றினார்."

"கண்ணதாசன் நன்றாகக் கவிதை இயற்றுவார்"

"கண்ணதாசன் எழுதும் இனிமைப் பாடல்களுக்கு ரசிகர்களிடம் நல்ல மதிப்புண்டு."

இயற்று என்பதற்கு "செய்" என்ற பொருளுமுண்டு.

| GROUP – A | | GROUP – B | | GROUP – C | | GROUP – D | |
|---|---|---|---|---|---|---|---|
| THESE WORDS DENOTES, THE DIFFERENT POSITIONS OF NATURE | | THESE WORDS ARE GIVES EXPLAIN THE DOING OF THE PERSONS. | | THESE WORDS ARE SOME CERTAIN PROCEEDURES OF PEOPLE'S LIFE. | | THESE WORDS ARE GIVES THE GENERAL MEANING OF HABITS. | |
| இயற்கை | Noun | கட்டளை | Noun | இல்லறம் | Noun | பழக்கம் | Noun |
| இயல் | Noun | பதிவு | Noun | துறவறம் | Noun | வழக்கம் | Noun |
| இயல்பு | Noun | இயற்று | Verb | ஒகு | Noun | வாடிக்கை | Noun |
| நில | Noun | | | இயைபு | Noun | வாலாயம் | Noun |
| | | | | இன்பம் | Noun | அலவாட்டு | Noun |
| | | | | பொருள் | Noun | வழங்கு | Verb |
| | | | | அறம் | Noun | களவு | Noun |
| | | | | நெறி | Noun | | |
| | | | | நெறிமை | Noun | | |
| | | | | கற்பு | Noun | | |
| | | | | நேர்மை | Noun | | |
| | | | | வழி | Noun | | |
| | | | | மரியாதை | Noun | | |
| | | | | நடக்கை | Noun | | |
| | | | | ஊழிமை | Noun | | |

Note:-

இயைவு என்பதின் திரிபு "இயைபு"
நிலை என்பதின் திரிபு "நில"
இயல்வு என்பதின் திரிபு "இயல்பு"
கர்பு என்பதின் திரிபு "கற்பு"

திரிபு = Change